**தலைப்பு 334 – பல்பணி அபிவிருத்தி செயலணித் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பல்பணி அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பல்பணி அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பல்பணி அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள்

மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பல்பணி அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பல்பணி அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும்.

பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டிற்கான ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடுகள் ஆகிய ரூபா 25,959,720,000 தொகையில் ரூபா | பல்பணி அபிவிருத்தி உத்தியோகத்தர் 100,000 தொகையினை நிரந்தரப்படுத்தி சம்பளம் செலுத்துதல் சீருடை | வருடாந்த ஏற்பாடுகளை உச்சமட்ட வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| 9,557,479,050 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், சேமிப்பு ரூபா 16,402,240,950 தொகை அதாவது 63 சதவீதமாகக் காணப்பட்டது. 08 செலவு விடயங்களின் சேமிப்பு கூட்டுத்தொகை ரூபா 15,385,192,167 தொகையாக இருந்ததுடன், அந்த சேமிப்பின் சதவீதம் நூற்றிற்கு 80 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | வழங்குதல் பயிற்சி வழங்கல் போன்ற அலுவல்கள் திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாமல் போனமையால் இந்த ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமல் போனது. | |

### 2.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் “பீ” கணக்கின் அங்கீகரிக்கப்பட்டிருந்த உச்சமட்ட வரவு மீதி எல்லை ரூபா 19,768,427 தொகையினால் மிகைத்திருந்தது. இந்த எல்லை மிகைத்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட எல்லை திருத்தங்களுக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் என தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் அறிவித்திருந்த போதிலும் 2022 மே மாதம் வரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பாதீட்டுத் திணைக்களத்திடம் வினவப்பட்டதுடன் 2022/05/31 திகதிக்கு முன்னர் பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட உச்சமட்ட வரவு எல்லையுள் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப் பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஒக்தோபர் மாதம் சேர்க்கப்பட்ட பயிலுனர்கள் 34,605 பேரில் 2022 ஆண்டு அளவில் 06 மாத காலம் பயிற்சி ஒன்றின் பின்னர் | பதில் அனுப்பியிருக்கவில்லை. | பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்குதல், NVQ 3 சான்றிதழ் வழங்குதல் மற்றும் நிரந்தரப்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| மூன்றாம் கட்ட பயிற்சியை பூர்த்தி செய்து கொடுப்பனவு நிபந்தனைகளை 22,306 பேர் மாத்திரம் பூர்த்தி செய்திருந்ததுடன் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்த பயிலுனர்களுக்கு NVQ 3 சான்றிதழ் வழங்குதல் 2022 மே மாதம் வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | உரிய அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) இணங்க திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் பண்டக் கணிப்பீட்டு சபையொன்று நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் அந்த சபை 2022 மார்ச் 15 திகதி நியமனம் செய்தமையால் 2022 ஏப்ரல் 30 திகதி வரை பண்டக் கணிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 திகதியிலுள்ளவாறு பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படவுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளல். |

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில் பெறுவோருக்கு பயிற்சியின் பின்னர் NVQ 3 சான்றிதழ் வழங்கி பொருத்தமான அரசாங்க தொழில்களுக்காக இணைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், பயிற்சிக் காலத்தில் விலகிய பயிலுனர்கள் எண்ணிக்கை 2,470 ஆக இருந்தது. இந்த பயிலுனர்களுக்காக மாதாந்தம் | விலகிய எண்ணிக்கை 7% இனை கொண்டிருந்தது. பல்வேறு காலங்களினால் பயிற்சி பெறுவோர் விலகுதல் ஆரம்ப காலம் முதல் பல்வேறு கட்டங்களில் நேரிட்டிருந்தது. சட்ட ரீதியான பயிற்சி ஒன்றின் பின்னர் பயிற்சி பெறுவோர் பல்வேறு நிறுவனங்களில் ஆரம்பத்தர தொழில்களுக்கு | பயிலுனர்கள் விலகிச் செல்வதன் மூலம் திணைக்களத்தின் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்படாமையால் விலகிச் செல்லலை குறைப்பதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட ரூபா 22,500 வீதமான செலவு பயனற்ற செலவொன்றாகியுள்ளது. இந்த விலகிய பயிற்சிபெற்றோர் 2,470 பேருக்கான மாதாந்த கொடுப்பனவு மாத்திரம் ரூபா 55.58 மில்லியன் தொகையாக இருந்தது. | அனுப்பப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு பயனற்ற செலவொன்றென கணிக்க முடியாது. | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட மட்டம் முதல் ஆரம்ப மட்டம் வரை அனைத்து மட்டங்களிலும் வெற்றிட சதவீதம் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை காணப்படல், திணைக்கள அலுவல்களை பேணிச் செல்வதற்காக பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | செயலாற்றுகையை அதிகரிப்பதற்காக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | நிர்வாக உத்தியோகத்தர் பதவி இரண்டு மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் பதவி 20 இல் 15 உம் மற்றும் முகாமைத்துவ சேவைத் உத்தியோகத்தர் பதவ 30 இல் 23 வெற்றிடமாகக் காணப்படல் திணைக்களத்தின் நாளாந்த கடமைகளுக்கு பாதிப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கவில்லை. | செயலாற்றுகையை அதிகரிப்பதற்காக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு 02 இல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்காக மனிதவள அபிவருத்தித் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்டைல. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல். |